முருகப்பெருமான் துணை

**மகான் சட்டநாதர் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

15.06.2023, வியாழக்கிழமை

1. வானவர் போற்றும் ஆறுமுக
வள்ளலே வாழும் ஞானியே
ஞானச் சுடரேற்றும் தவசியே
ஞானியே உன் பெருமை கூறி
2. கூறியே சோபகிருது விடைதிங்கள்
குறைவிலா முப்பானீர் திகதி குருவாரம்
(சோபகிருது வருடம் வைகாசி மாதம் 32 ம் நாள், 15.06.2023, வியாழக்கிழமை)
தெரிவிப்பேன் அறிவுரை ஆசி
தேசிகனும் கேட்க சட்டநாதர் யானும்
3. யானும் உயர் மக்கள் படை
உலகமெல்லாம் அமைய உரைப்பேன்
ஞானமாம் அரங்கன் உபதேசம்
நாடெங்கும் சட்டமாக்கப்பட வேணும்
4. வேண்டியே உலக மக்களும்
வேலவனே தலைவன் என
தொண்டுசெய்து ஏற்றுமே
தொண்டர்களாகச் சக்தி கூட்டி
5. கூட்டியே சன்மார்க்க நெறிபட
குவலயத்தில் அற்புதம் நடக்க
கட்டாயத் தொண்டர்கள் சேர்க்கை
கணக்கிலா மிகுதி படுத்திவர
6. வருகவே எங்கும் சக்தி
வள்ளல் தன்மையாக திடமாக
முருகப் பெருமான் ஆசிதரவே
முழுமையான ஞானப்படைகளாக
7. ஆகவே மாற்றம் கண்டு
அகிலம் ஆபத்தை கடந்து
வகையான பாதுகாப்புமிக்க
வளர்ச்சி நிலை தனை கண்டடையும்

8. அடையவே எங்கும் எதிலும்
அளப்பெரிய மாற்றம் ஆக
தடையற நல்லத் தலைமையாக
தன்னார்வத் தொண்டு மிக்க
9. மிக்கநல் ஞானவான் சபை
மேலவர்கள் சேர்ந்த சபையாக
ஆக்கமுடன் உலகம் நிரம்பி
ஆறுமுகப் பெருமான் வெளிப்பட
10. வெளிப்பட அஞ்ஞானம் விலகி
வெற்றிமுகம் ஞானவான்கட்கு
தெளிவுபட உண்டாகி இனிதே
தேசம் ஞான பூமி ஆகும்
11. ஆகவே கலியின் ஞானி
அரங்கன் அவதரித்த நோக்கம்
யுகமாற்றமாக நடந்தேறக் கூடும்
உரைத்தநல் அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—